# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 7

சுட்டெண்:........................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

அ) 216 ஆ) 30 இ) 247 ஈ) 18

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. கயிலை வன்னியன் ஆட்சி செய்த ஆண்டுகள்

அ) 44 ஆ) 34 இ) 24 ஈ) 43

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. முரசு கட்டிலில் படுத்து உறங்கிய புலவர்

அ) ஔவையார் ஆ) சின்னத்தம்பிப் புலவர்
இ) திருவள்ளுவர் ஈ) மோசிகீரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. அடம்பன் கொடியும் ________________ மிடுக்கு.

அ) திரண்டால் ஆ) திரன்டால்
இ) திறன்டால் ஈ) திறண்டால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. நாவரசன் நீர் வேட்கையினால் இளநீரை ________________ என்று குடித்தான்.

அ) மளமள  ஆ) மடமட  இ) கடகட  ஈ) படபட

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. வன்னிப்பகுதி எத்தனை பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது?

அ) ஆறு  ஆ) ஒன்பது  இ) ஏழு  ஈ) எட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. தோற்கருவிகளில் ஒன்று

அ) வீணை  ஆ) புல்லாங்குழல்
இ) மேளம்  ஈ) வயலின்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பழனம் என்றால்

அ) காடு  ஆ) வயல்  இ) வீடு  ஈ) தோட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. ஆசிரியர் செய்யுட் பொருளைத் தெளிவாக விளக்கினார்.
இச்சொல்லியத்தில் இடம் பெற்ற செயப்படுபொருள்.

அ) ஆசிரியர்  ஆ) தெளிவாக
இ) பொருளை  ஈ) விளக்கினார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. அறிவுக்குப் பகை

அ) மனம்  ஆ) பணம்
இ) ஆசை  ஈ) சினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இலங்கையின் தொல்குடியினர்

அ) இயக்கர்  ஆ) ஆரியர்
இ) சமணர்  ஈ) பௌத்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகரங்களில் ஒன்று

அ) கந்தரோடை ஆ) கண்டி
இ) கோட்டை ஈ) புத்தளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மருதுபாண்டி விளையாடச் சென்ற இடம்

அ) வீட்டின் அருகே ஆ) தோட்டத்தின் அருகே
இ) இரும்புத்தடம் அருகே ஈ) வீதியின் அருகே

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. காடும் காடு சார்ந்த இடமும்

அ) முல்லை ஆ) குறிஞ்சி
இ) மருதம் ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. குரங்குகள் உழவருக்கு எதனால் எறிந்தன?

அ) இளநீரால் ஆ) சங்கினால்
இ) பலாக்கனியால் ஈ) பாக்கினால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. குறள்:-

அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
_______________ மிலான்க ணுயர்வு.

அ) ஒழுக்க ஆ) ஒலுக்க
இ) ஒளுக்க ஈ) ஒருக்க

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. மோசிகீரனாரின் தலையைக் காத்தது

அ) கொடை ஆ) மானம்
இ) தமிழ் ஈ) வீரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. "ஒறுப்பு" என்ற சொல்லின் பொருள்

அ) தண்டனை ஆ) குற்றம்
இ) பாவம் ஈ) தீமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சினங்காத்தல் பற்றி வள்ளுவர் கூறிய அதிகாரம்

அ) கொல்லாமை　　ஆ) வெகுளாமை

இ) கல்லாமை　　ஈ) பொய்யாமை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

20. இசை நுணுக்கம் பற்றி விரிவாகக் கூறும் நூல்

அ) மணிமேகலை　　ஆ) சிலப்பதிகாரம்

இ) வளையாபதி　　ஈ) குண்டலகேசி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

21. கயிலை வன்னியன் ஆண்ட வன்னிப் பகுதியின் பெயர்.

அ) மன்னார்　　ஆ) பூநகரி

இ) பனங்காமம்பற்று　　ஈ) கந்தரோடை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

22. கருத்தடிப்படையில் சொல்லியங்கள் எத்தனை வகைப்படும்?

அ) நான்கு　　ஆ) மூன்று

இ) ஐந்து　　ஈ) இரண்டு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

23. ‘ஆறுவது சினம்’ எனக் கூறியவர்

அ) வள்ளுவர்　　ஆ) இளங்கோவடிகள்

இ) சிவப்பிரகாசசுவாமி　　ஈ) ஔவையார்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

24. மோசிகீரனாருக்கு கவரி வீசிய மன்னன்

அ) பாரி　　ஆ) குலோத்துங்கன்

இ) சேரன்　　ஈ) இரும்பொறை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

25. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) மெல்லமெல்ல ஆ) சின்னஞ்சிறிய

இ) அக்கம்பக்கம் ஈ) கிடுகிடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. மஞ்சள் குளித்து முகம் மினுக்கி மாயப் பொடிபூசி நிற்பது

அ) சூரிய காந்தி ஆ) தாமரை இ) செவ்வந்தி ஈ) மல்லிகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. ஒழுக்கத்தால் சிறந்தோர்

அ) செல்வந்தர் ஆ) சிறியோர்

இ) சான்றோர் ஈ) தீயோர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பாய்ந்து என்பது

அ) பெயர் எச்சம் ஆ) வினை எச்சம்

இ) வினைமுற்று ஈ) வினைச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இன்று மழை பெய்யுமா? என்ற சொல்லியம்

அ) கூற்று ஆ) வினா

இ) ஏவல் ஈ) மெய்ப்பாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஒன்று பட்டால் உண்டு ________________ .

அ) வாள்வு ஆ) வால்வு

இ) வாழ்வு ஈ) வாள்வ்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. துளைக் கருவிகள் இரண்டின் பெயர்களைத் தருக.

2. கயிலை வன்னியனுக்கு அஞ்சி போர்த்துக்கேயர் எங்கெங்கு கோட்டைகளைக் கட்டினர்?

3. மருதுபாண்டியன் தொடருந்தை எவ்வாறு நிறுத்தினான்?

4. சினத்துக்கு உவமையாக வள்ளுவர் எதைக் கூறுகின்றார்?

5. வன்னி மக்களின் தனித் தன்மையாது?

6. மோசிகீரனாருக்கு சேரமன்னன் கவரி வீசியது ஏன்?

7. உழவர்கள் வயலை உழும்போது சேற்றில் இருந்து மிதப்பவை எவை?

புள்ளிகள் 10

### 3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழ் அறிஞர்கள் மட்டுமன்றி மேலைநாட்டு அறிஞர்களும் தமிழுக்குத் தொண்டு செய்துள்ளனர். அத்தகையோரில் ஒருவர் தான் வீரமாமுனிவர் எனப்படும் பெக்சி அடிகளார். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவர் இளமையிலேயே துறவை நாடி கத்தோலிக்க கிறித்தவ இறையடியராய் தொண்டாற்றினார். இவர் இறை நெறிப்பணிக்காக தமிழகம் சென்றார். அங்கு இறை நெறியைப் பரப்ப வேண்டுமானால் இறைவழிபாடும் சமயச் சொற் பொழிவுகளும் தாய் மொழியில் இடம் பெற வேண்டும் என்பதை உணர்ந்தார். எனவே தமிழைக் கற்கத் தொடங்கினார். கற்கக்கற்கத் தமிழின் செம்மையையும் மேன்மையையும் இலக்கியங்களின் வளத்தையும் கண்டு வியந்தார்.

அதனால் தமிழில் உள்ள நூல்களைத் தேடிக் கற்றார். தமிழ்க்கல்வியினால் அவர் தமிழனாகவே மாறிவிட்டார்.கற்றோருக்கு மட்டுமே விளங்கக் கூடிய இலக்கண இலக்கியங்களை எளிமைப்படுத்த வேண்டும் என எண்ணினார். அந்த எண்ணத்தின் விளைவாகத் தோன்றியது ''சதுரகராதி'' என்ற தமிழ் அகரமுதலி. இது தான் தமிழின் முதலாவது அகரமுதலி. அது மட்டுமல்ல இலத்தின் மொழியைப் பின்பற்றி, குறியீடுகளைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவரும் இவரே. மேலும் திருக்குறள், தேவாரம், திருவாசகம் போன்ற இறையிலக்கியங்களின் சிறப்புகளைக் கண்டு அவற்றினை மொழிபெயர்த்து; மேலை நாடுகளுக்குத் தமிழின் சிறப்பை எடுத்துக் காட்டினார். 'தேம்பாவணி' என்ற கிறித்தவ இலக்கியத்தை எழுதி, மதுரைத் தமிழ்க்கழகத்தால் வீரமாமுனிவர் என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இவர் தமிழனாக வாழ்ந்து, தமிழகத்திலே உயிர்நீத்தார்.

1. முதல் முதல் வெளிவந்த அகர முதலியின் பெயர் என்ன?

2. பெச்சி அடிகள் இறைநெறிப் பணிக்காக எங்கு சென்றார்?

3. இவருக்கு வீரமாமுனிவர் என்ற பட்டத்தை வழங்கிய கழகம் எது?

4. இவர் எழுதிய கிறித்தவ இலக்கியநூல் எது?

5. வீரமாமுனிவர் மொழிபெயர்த்த இறை இலக்கியங்கள் எவை?

புள்ளிகள் 10

## 4) பாடலை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்குதடடா!
அன்றந்த இலங்கையினை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடைகொடுக்கும் கையான்
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்
என் தமிழர் மூதாதை என் தமிழர் பெருமான்
இராவணன் காண் அவன்நாமம் இவ்வுலகம் அறியும்
வெஞ்சமரில் சாதல்வர நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையை நான்மறைகள் தன்னை
சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்துகின்ற தமிழர்
தமிழரென்பேன் மறந்தவரைச் சழக்கரெனச் சொல்வேன்.

1. ஐயிரண்டு திசையும் தன் புகழை வைத்தோன் யார்?

_______________________________________________

_______________________________________________

2. யாருக்கு இராவணன் கூற்றம்?

_______________________________________________

_______________________________________________

3. யாரைத் தமிழர் என்பேன் என்று கவிஞர் கூறுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

4. இராவணன் ஆண்ட நாடு எது?

_______________________________________________

_______________________________________________

5. இராவணனது கை எத்தகையது?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. எழுவாய் அடைமொழியுடன் கூடிய சொல்லியம் ஒன்று தருக.

_______________________________________________

_______________________________________________

2. படி என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர்:- _______________________________________

_______________________________________

வினை:- _______________________________________

_______________________________________

3. பின்வரும் அடுக்குத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

மெல்லமெல்ல

_______________________________________________

_______________________________________________

சின்னச்சின்ன

_______________________________________________

_______________________________________________

4. கூற்றுச்சொல்லியம், ஏவற்சொல்லியம் என்பவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

_______________________________________________

_______________________________________________

5. பின்வரும் வினையடிகளின் பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றைத் தருக.

| | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| எழுது | ____________ | ____________ |
| நட | ____________ | ____________ |
| ஓடு | ____________ | ____________ |

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நாங்கள் எமது பெற்றோரை மதிக்க வேண்டும். அவர்கள் எங்கள் வாழ்க்கையில் முதன்மை வகிக்கிறார்கள். அவர்கள் கடினமாக உழைத்து எங்களை வளர்க்கின்றார்கள். அப்பா பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வேலைக்குச் செல்கிறார். அம்மா வீட்டுவேலைகள் செய்வதுடன் குடும்பத்தின் பணத்தேவைக்காக வேலைக்கும் செல்கின்றார்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ மருது பாண்டியன்

★ "**தலையைக்காத்த தமிழ்**" என்ற பாடலை உமது உரைநடையில் எழுதுக.

★ உமது பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா

புள்ளிகள் 20